T03950
R001J01

உ

பரதேசி துணை.

# அனந்தங்காடு

அல்லது

ஸ்ரீவாங்கள் என்கிற சந்நியாசிசெய்த பூஜையும், அநந்த பத்மநாபர் ஸ்தோத்திரமும்.

43

இஃது

சென்னை

**R. S. சுபலக்ஷுமி அம்மாளால்**

பிரசுரிக்கப்பட்டது.

பத்தாம் பதிப்பு.

PRINTED AT THE
BHARATI VIJAYAM PRESS, TRIPLICANE, MADRAS.

3950

1947

*Copy-right Registered.*

*Price Annas* 3] [விலை அணா 3

பராதேவீ துணை.

# முகவுரை.

இந்த அனந்தங்காடு என்னும் பாட்டில், மலையாளத்தில் ...ந்தபுரமென்கிற ஸ்தலத்தில் எழுந்தருளியிருக்கும் ஆதிமூலப் ...ாகிய ஸ்ரீ அனந்த பத்மநாப ஸ்வாமியின் சயனமும், அவர் சயனம் பண்ணக் காரணமாக இருந்த ஸ்ரீவாங்கள் என்கிற ...வி சரித்திரமும் விளங்குகின்றன. ஸ்ரீவாங்கள் என்பவர் ...கர் வாவலியென்றும், ஜாதியில் மாத்துவப் பிராமணரென்றுஞ் ...றது. இவர் வெகு காலமாய் ஸ்ரீ மகா விஷ்ணுவைக் குழந்தை ...த தேவகி தேவியாருக்குப் புத்திரனுகப் பிறந்து ஆயர்பாடியில் ...ாடிக் காட்டிய பாலகோபால வடிவத்தை தரிசித்து நேத்திரா ...டைய எண்ணி, பூஜாமுகத்தில் தியானம் பண்ணிக்கொண்டு ...ர். இப்படியிருக்கையில் ஒருநாள் பூஜாகாலத்தில் தியானத்தி ...ரும்பொழுது, பகவான் சர்வாபரண பூஷிதராய் கண்டோர் ஆனந்த பரவசமாகக் கோலாகலமாகக் கூத்தாடியும், மழலைச் ...லால் செவிக்கு இன்பத்தை உண்டாக்கியும், விளையாடிக் ...ாடே சந்நியாவலியை ஆலிங்கனஞ்செய்து மடிமேலும் ஏறினர். ...ரிஷி தனக்கு தியானத்தில் சிந்தை லயித்திருந்ததி ...யா அல்லது ப்ராரப்த கர்மம் தீராததிறைலேயோ, ...து திவ்வியமங்கள விக்ரகமாகிய இந்த பாலகோபாலர் ...டியைக்கண்டு நேத்திராநந்தமடையும் பூர்ண தவம் முடி ...யினுலேயோ, மூடின கண் திறக்காமலே மடியில் ஏறின ...தயைப் புறங்கையால் தள்ளி, பூஜாகாலத்தில் இடையூறு ...ாதே என்றும், சும்மாவிருந்தால் பிறகு பழம் தருவேனென்றும் ...ணக் குழந்தைக்குச் சொல்லுவதுபோல சொல்ல பகவானுகிய ... குழந்தை தன்னைப் புறங்கையால் அதட்டி, "எட்ட இரு" சொல்லைப் பொறுமல், தன் மழலைச்சொல்லால் தபஸை நிறுத் ...று சொல்லிவிட்டு, இவரால் தள்ளப்பட்ட இந்தக் குழந்தை ...வு இனி இவர் என்ன கெஞ்சிக் கேட்டுக்கொண்டாலும்

காண்பிக்கிறதில்லை என்ற எண்ணத்தோடு, தான் வந்த ஜாடையைத் தெரிவிக்க மின்னல்போல் தன் உருவைக் காட்டி மறைந்து, இனி உனக்கு அனந்தன்காட்டில் தரிசனம் கொடுக்கப்படுமென்று அசரீரி வாக்காகச் சொல்லி, அவர் பின்னும் தான் முன்னுமாகத் தான் நடந்து போகும் சந்தடியைக் கேட்டுக்கொண்டே அனந்தன்காட்டுக் கழைத்துப் போய், புருஷோத்தமராகிய பகவான் பெரிய ரூபத்தோடு சயனம் பண்ணிச் சந்நியாஸிக்குத் தரிசனமும் முக்தியும் கொடுத்தார். சயனம் பண்ணின காலத்தில் மூன்று ஊருக்குச் சரியாக இருந்த பகவான் உருவம் இப்பொழுது மூன்று வாசற்படி அளவாகக் குறுகிவிட்டதாமாகையால், திருமுடியின் தரிசனம் முதல் வாசற்படியாலும், திருநாபிக்கமல தரிசனம் இரண்டாவது வாசற்படியாலும், திருவடியின் தரிசனம் மூன்றாவது வாசற்படியாலும் இப்பொழுது காண்பிக்கப்படுகின்றது. மூன்று வாசற்படியுள்ள கர்ப்பக்கிரகத்தில் பெரிய ஆகிருதியான உருவத்தோடு பகவான் சயனம் பண்ணிக்கொண்டிருக்கிறார். இன்றைக்கும் முதலில் சந்நியாஸி பூஜையும் (அதாவது பச்சரிசி, மாங்காய் நைவேத்தியமும்) பிறகு பால் பரமான்ன நைவேத்தியமும் மிகவும் விமரிசையாக நடந்துகொண்டு வருகிறது. இந்தக் கதையை ஒட்டி இன்றைக்கும் எந்தவேளையில் நாமிருந்தாலும் ஒரு குழந்தை வந்தால் (எவர் குழந்தையானாலும் சரி) அதைப் பிரம்மஸ்வரூபமாக எண்ணி எடுத்துக்கொண்டாடவேண்டும் என்றும், கோபத்தோடு ஒரு குழந்தையைத் தள்ளலாகாதென்றும், பூஜைக்கு வைத்திருக்கும் எந்த வஸ்துவையானாலும் ஒரு குழந்தை கேட்டால் கொடுக்கவேண்டுமென்றும், குழந்தைகள் பிரத்தியட்ச தெய்வமென்றும் பெரியோர்கள் சொல்லுகிறார்கள். வேறு எந்த விதமாய்க் கோபித்துக்கொண்டாலும் ஒரு குழந்தையை புறங்கையால்மட்டும் தள்ளக்கூடாது என்பார்கள்.

வித்தியாசமானவும், பொருத்தமானவுமான சில மெட்டுக்கள் இதற்குண்டு. அவைகளை இந்தப் பாட்டுத் தெரிந்த பாட்டிமார்களிடம் கேட்டுத் தெரிந்துகொள்ளலாம். வேறு பொருந்தக்கூடிய மெட்டுக்களை அங்கங்கே குறிப்பிட்டிருக்கிறேன்.

இதிலடங்கிய "பாகவதலீலை" என்னும் பாகம் (265 முதல் 340 வரையில்) இந்தப் பாட்டைச் சேர்ந்ததல்ல.

இந்தப் பாட்டை ஆக்கியோர் இன்னாரென்று ஏற்படவில்லை, பொதிந்து கிடக்கும் பிழைகளின் மிகுதியால் வெகுகாலத்ததாக

ஹிக்கலாம். நான் கேட்டபடி எழுதியதை அநேகமாய் வரிக்குவரி திருத்தி உருவாக்கியிருக்கிறேன்.

இந்த மகிமைபொருந்திய ஸ்ரீ அனந்த பத்மநாபர் ஸ்தோத்திரப் பாடலை சகலரும் வாங்கிப் படித்து ஆனந்தமடைவதோடு ஸ்ரீ கண்ண மூர்த்தியின் அருளுக்குப் பாத்திரராவார்களாக.

R. S. சுபலக்ஷ்மி அம்மாள்.

ஸ்ரீபரப்பிரம்ம ஸ்வரூபியாகிய பாலமூர்த்தி கண்ணனுக்கு இதை சமர்ப்பிக்கிறேன்.

ஓம்—தத்—ஸத்.

# அனந்தங்காடு ஸ்ரீவாங்கள் என்கிற சந்நியாசி செய்த பூஜையும் அனந்த பத்மநாபர் ஸ்தோத்திரமும்.

---

## கணபதி வணக்கம்.

(1-வது மெட்டு.)

1 சித்தை திடங்கொண்ட ஸ்ரீவாங்களும்
ஸ்ரீகிருஷ்ணன்றனைப் பூஜித்ததை

2 பரிவுடனிந்தக் கதைநடத்த
பக்தியுடனுமை புத்திரனே

3 தும்பிமுகத்தோனே கணபதியே
சிவந்தகனிபழந் தேங்காயும்

4 தப்பாமலேநான் படைத்திடுவேன்
சக்திகணபதி முன்னடவும்

5 அனந்தபுரத்தானின் திருமருகா
ஆதிசிவனார்க்குப் புத்திரனே

6 தினந்தோறும்கனி மோதகமும்
சீடைசெவ்விளநீர் படைப்பேன்

7 அனந்தங்காட்டிலே ஆதிமூலம்
அன்றுநடத்திய லீலைசொல்ல

8 (என்) மனந்தன்னில்வந்து முன்னடவும்
மயில்வாகனார்க்கு மூத்தவரே

## வாணி வணக்கம்.

9 நாவில்நிலைக்குமென் தாயாரே
நான்முகவர்க்குத் தேவியரே
10 பாரேழுங்கீர்த்தி மிகவிளங்க
பத்மநாபராய் உதித்தவர்தன்
11 சோலைசொல்லவே முன்னடவும்
ஸரீஸ்வதி உன்னை மறவேனே

## ஸ்ரீவாங்கரிஷியின் பூஜை.

12 கர்மபந்தங்கள் தானொழிந்து
கலியுகம்விட்டு ஈடேற
13 நன்மையான அந்த ஸ்ரீவாங்களும்
நல்லவிஜய நகரந்தனில்
14 ஜென்மஜென்மந்தோறும் பூஜித்து
ஸ்ரீவாங்கள் பூஜை பண்ணிவந்தார்
15 சங்கம்பூஜித்து ஸ்ரீவாங்களும்
சதுர்வேதக்கோடி யந்திரத்தால்
16 பிங்கலை தன்னி லிடைநிறுத்தி
பிரணவமூர்த்தியை உச்சரித்து
17 எங்கும் ஓடாமல் வாயுவை
இந்திரியங்களை உள்ளடக்கி
18 அங்க அஷ்டாங்க யோகத்தினால்
அஷ்டாக்ஷரத்தினால் ஆராதிப்பார்
19 சங்கையறநின்று ஆராதித்து
தியானம்பண்ணியே ஸ்ரீவாங்களும்
20 கண்களித்திடும் பாலரூபக்
கண்ணமூர்த்தியைச் சிந்தைபண்ணி
21 சங்கபூஜை கலசபூஜை
ஸர்வாந்தரி யாத்மாவைப் பூஜைசெய்தார்

## ஸ்ரீபாலகோபாலர் பிரத்தியக்ஷமாகி விளையாடி நிருத்தஞ் செய்தது.

சோபனமடி சோபனமே
சுபசோபனம் தமிழ்பாட
(என்கிற மெட்டிலும் 22 முதல் 96 வரையில் பாடலாம்.)

22 எங்கும் நிறைந்திடும் ஆத்துமாவை
ஏகரூபமாய் தியானஞ் செய்தார்

23 பங்கஜப்பாதம் மனதில்வைத்து
பக்திபுடன்கண்ணை மூடிநின்றார்

24 மங்களமான ஸ்ரீகோபாலர்
வந்து அவர்முன்னே தோன்றினரே

25 தோன்றியகோபாலர் வடிவைச்
சொல்லமுடியா தொருவராலே

26 பூர்ணசந்திரன் போல்முகமும்
புண்டரீகமலர்க் கண்களும்

27 தபழ்ந்தகிண்கிணி அரைவடமும்
சதங்கைகொஞ்சி சலுஞ்சலென்க

28 ஆணவிரல்கழல் மோதிரங்கள்
ஒடிச்சிதறவே நிருத்தஞ்செய்தார்

29 நிருத்தஞ்செய்கின்ற சேர்வைகண்டு
நித்யபக்தர்கள் கண்குளிர

30 முத்துமாலையும் தோளசைய
முகஞ்சிவந்துமே வேர்த்தரும்ப

31 மற்றும்வார்காதுப் பணிகுலுங்க
விசால நயனங்கள் சுழன்றுவர

32 கொத்துத்துளசியும் வேர்க் கொழுந்தும்
குலுங்கியேநின்று பரிமளிக்க

33 தத்தித்தத்தி யவர்நடந்து
தங்கிச்சப்பாணி கொட்டுவாராம்

34 நித்தியானந்த ரூபரங்கே
நிருத்தமாடத் துவக்கினரே !

35 ஸமஸ்தலோகத்தின் ஸாக்ஷியாகி
ஸர்வாந்திரியாத்மா நானேன்று

36 விருத்தராகிய ஸ்ரீவரங்கள்முன்
விளங்கும்ரூபத்தை காட்டினரே !

37 சிறந்தகனிவாயில் அமிர்தம்சிந்த
சிலம்புகளார்க்கப் பாதஞ்சிவக்க

38 வருந்தியே போற்றும் மறையோர்முன்னே
மகிழ்ந்துமாதவர் நிருத்தஞ்செய்தார்

39 பச்சைமணியுடன் பதக்கந்தாழ
பணிகள்குலுங்கியே பளபளென்க

40 அஞ்சனக்கண்ணும் வார்காதும்
அழகாய்த்திருத்திய குழற்கற்றையும்

41 கொஞ்சும் கனிவாயின் மழலைச்சொல்லும்
கோமளமான தளர்நடையும்

42 தஞ்சங்கொடுக்கவந்த பாலகன்
தட்டுமோதிரங் கையில் மின்ன

43 அஞ்சேலென்றகை வெண்ணெய்சோர
ஆயன்குதித்தாடத் துவக்கினரே

44 சொர்ணப்பதக்கமும் கௌஸ்துபமும்
துய்யக்கழுத்திலே ஜேர்திவிட

45 ஸ்தம்பமாகியோர் பொருளுமாகி
தரணிமுழுதிற்கும் நாதனாகி

46 இன்பமாகுமோர் பொருளுமாகி
இருளில்லாப்பதம் இதுவேஎன்று

47 நம்பினபேரை அஞ்சேலென்றும்
(என்) நாதன் குதித்தாடத் துவக்கினரே

48 முத்துக்கடுக்கனும் அதன்நடுவில்
ரத்னமாணிக்கக் குண்டலமும்

49 ஒத்தும்கைதனில் ஒளிதிகழ
சித்திரக்குழல் சுருண்டசைய

50 அத்தன்கோபாலன் யசோதைமைந்தன்
ஆதிபழம்பொருள் பாலராகி

51 நித்தந்தவஞ்செய்யும் ஸ்ரீவாங்கள்முன்
நிருத்தமாடத் துவக்கினரே!

52 அடியாரிடத்தில் கிருபைபெருக
(தன்) அடிகளிற்சந்தனப் பொடியுதிர

53 கமலக்கைகளின் கனகவளை
களித்தாடும்போது கழன்றுவிழ

54 வெளியாகிஎங்கும் இருள்நீங்க
விஸ்வரூபர் எதிரில்நின்று

55 நெடியதிருமேனிதனை யொடுக்கி
நிருத்தம் சுவாமியும் ஆடினரே

56 அகிலாந்தகார இருள்நீங்கி
அகிலம்பெருவெளி யானாற்போல்

57 இருகரத்துடன் பாதங்குலுங்க
நவசந்திரக்காந்தி ஒளிதிகழ

58 தருவேன்தருவேன்நான் தற்பதத்தை
(உம்ம)தபஸைநிருத்தென்று சொல்லுவார்போல்

59 இருமைப்பயன்தரும் கிருஷ்ணமூர்த்தியும்
ஒருபாதம்தூக்கி ஆடினரே

60 சுகிருதியாகிய ஸ்ரீவாங்கள்முன்
சொகுஸுகாலிற் சிலம்புகொஞ்ச

61 கோடிசூரியர் கூடியேவந்து
மகாபாலராகி யுதித்தாற்போல்

62 பாலரடிக்கையில் வளைகுலுங்க
பங்கஜப்பாதங்கள் தான்சிவக்க

63 ஓடியுலாவும் விழியழகும்
உன்னதழக்கும் ஒளிபெறவே

64 நாடியேசித்தடியைத் தூக்கி
(என்) நாதன் குதித்தாடத் துவக்கினரே

65 பூரணர்ஆடின திருக்கூத்தை
பக்தியுடன்கூடி பஜித்தவர்க்கு

66 தப்பாமற்பதந் தருவேனென்று
திருச்சங்கபாணியும் நிருத்தஞ்செய்தார்

67 பிறகேசென்றவர் தோளைக்கட்டி
பின்னேஒளித்தவர் முன்னேநிற்பர்

68 ஆதிமூலப்பொருள் ஆனபாலன்
அவர்மடிமேலே மிதித்தேறுவர்

69 மீண்டும்அவர்மேலே சாய்ந்தாடுவர்
சற்றேகடைக்கண்ணுற் கிருபைபொழிவர்

70 (தன்) திருமுகத்துடன் அவர்முகத்தை
சேரவேவைத்துத் தழுவி நிற்பர்

71 திரும்பவும் மந்தஹாஸத்துடன்
தெண்டெடுத்தவர் தோளில்வைப்பர்

72 மணிப்பவழவாய் நகைத்துநிற்பர்
வைத்தசிவலிங்கந் தனைஎடுப்பர்

73 சரியில்லாத திருக்கையினல்
சாளிக்கிராமத்தைத் தள்ளிவைப்பர்

74 கருவறுத்திடும் கமலக்கையால்
கமண்டலதீர்த்தம் கவிழ்த்திடுவர்

75 அமரர்போற்றிடும் ஆதிவஸ்து
அறியாமானிடச் சிறுபிள்ளைபோல்

76 சபலங்கொண்ட ஸ்ரீவாங்கள்முன்னே
சகலலீலையுங் காட்டினரே

77 இருபத்தொருஜென்மம் இவரும்நம்மை
இப்படிக்காண வருந்துவதால்

78 மதித்தேன்உம்முட மாதவத்தை
மாற்றுந்தியானத்தை நிறுத்துமென்றார்

79 திரும்பவுமந்த ஸ்ரீவாங்கள்முன்
நிறுத்தும்தியானத்தை நிறுத்துமென்றார்

80 காரணர்சொல்லியும் கேளாராம்
(எதிர்) கண்டவஸ்துவை பாராராம்

81 ஆனந்தந்தனில் முழுகி அவர்
அதீத பிரம்மத்தில் லயித்திருந்தார்.

ஸ்ரீவாங்கரிஷி தன்முன் லீலைசெய்யும் குழந்தையை
பகவானென்று அறியாமல் அவமதித்தது.

82 ஞானப்பொருளான தத்துவத்தை
சற்றுங்கவனியா திருந்ததனால்

83 பூர்ணகிருபையுடன் சுவாமியின்னும்
(அவர்) புத்திகலங்கவே மாய்கைவழி

84 தியானமாந்தவம் தனைநீக்கி (சுவாமி)
ஆனந்தநிருத்தம் ஆடலுற்றார்

85 பாடுங்கனிவாயில் அம்ருதம்சிந்த
பங்கஜக்கையின் (திரு) ஆழிமின்ன

86 சூடும்வனமாலை மார்பில்தாழ
சுருண்டமயிர்க்கீழே சுட்டிமின்ன

87 வாடாமலரெங்கும் உதிர்ந்துசிந்த
வண்ணக்கிண்கிணி மருகிற்கொஞ்ச

88 தேடக்கிடைக்காத சித்தடியால்
ஸ்ரீவாங்கள்வைத்த தீர்த்தமெல்லாம்,

89 ஓடிக்களித்துமே விளையாடி
ஓங்காரரூபர் கொக்கரித்து

90 ஆடி அவர்வைத்த மலரிறைத்து
ஆலிங்கனம்பண்ணி ஸ்ரீவாங்களை

91 மாலை சந்தனம் மல்லிகைப்பூ
மணங்கள் அவர்மேலே பரிமளிக்க

92 பாலசூர்ந்த ஸ்ரீவாங்களாம்
பக்தர்மடிமேலே ஏறிநின்றார்

93 பக்திசோதிக்கும் பரமரப்போ
பக்தனுடைய கையைப்பிடித்தார்

94 பித்தங்கொண்டாரப்போல் ஸ்ரீவாங்களும்
புறங்கையால் தள்ளிப்புறக்கணித்தார்

95 நித்தியரென்று அறியாமல்
நின்றசிறுவரைக்கடுந்துரைப்பார்.

96 புத்தியறியாத பாலகனேநான்
போற்றும்நாதனைத் தொடுவாயோ

97 எச்சில்அறியாத கண்மணியே
இங்ஙனேசெய்தால் நான் என்செய்குவேன்

98 ஒத்திவிளையாடி நின்றாயானால்
உச்சிதமான பழந்தருவேன்(என்று)

99 உத்தாரம்ஸ்ரீவாங்கள் சொல்லலுமே
ஓங்காரமூர்த்தி மனம்வெறுத்து

ஸ்ரீபாலகோபாலர் ஸ்ரீவாங்கருஷியின்மேல் வெறுப்படைந்து
அசரீரியாய்ப்பேசி மறைதல்.

100 சட்டென்றுமே அவர்தான்விலகி
சர்வாபரணங்கள் தானசைய

101 பொட்டெனச்சென்று பளிச்சென்றங்கே
பொன்னுங்குண்டலம் ஜோதிவிட

101 மட்டில்லாத கபோலஸ்தலம்
வட்டக்கண்ணாடி போலமின்ன

103 செம்பவழம்போல மதரத்துள்ளே
சின்னப்பல்லொலி நிலாவெரிக்க

104 மெத்தவேமின்னும் நவரத்னத்தில்
விளங்கும்சிறுமுத்துப் பதித்தாப்போல்

105 செம்பவழக்கனி வாய்திறந்து
ஸ்ரீகிருஷ்ணமூர்த்தி எதுரைப்பார்,

106 யோகியின்சிந்தையில் வசிக்கும்நாதன்
உகந்துபக்தர்மேல் கிருபையுடனே

107 கோபிநாதன் குழந்தைரூபன்
கொஞ்சியேஒரு வார்த்தைசொல்வர்

108 (நீர்) சுத்தமுடன்வைத்துப் பூஜைபண்ணும்
(நான்) தொடுவதில்லை உம்மசிவலிங்கத்தை

109 (நீர்) எத்தனையோகாலம் வருந்தினீரே
இங்கேவந்து நான் லீலைசெய்ய

110 ஒத்திஇருவென்ற ஸ்ரீவாங்களே
உம்முடவார்த்தையை மறவேன்நான்

111 மத்தனாகிய மனதுள்ளோரே
மலையாளந்தன்னில் அனந்தங்காட்டில்

112 பக்திஅறிந்து பின்னேவருவோம்
பார்க்கலாமென்று பரமன்சொல்லி

113 சற்றேதம்முடைய சாயல்காட்டி
சந்திரன் வந்து மறைந்தாப்போல்

114 வித்தைகாட்டிய பேர்களைப்போல்
மின்னல் மின்னி மறைந்தாப்போல்.

115 அத்தன்கோபால கிருஷ்ணராயன்
அந்தர்த்தானம் ஆகி அகலநின்றார்

116 ஸ்ரீவாங்களும்தானும் கண்விழித்து
திடுக்கிட்டுஅங்கு பார்த்தவளவில்

117 சிதறியே அங்கு பூமலரும்
ஸ்ரீ துளசி வனமாலைகளும்

118 உதறியபூஜா திரவியமும்
உந்ததமான சித்தடியழகும்

119 பெருமான்வடிவமுங் காணமல்
பெருமூச்செறிந்து பிரமித்து நின்றார்

## ஸ்ரீவாங்கரிஷி பகவான்வந்து போனதையறிந்து கண்விழித்துப் புலம்பல்

120 துய்யகோபால கிருஷ்ணராயா
(நீர்) சிறுவராயிங்கே தோன்றினதை

121 ஐயாநான்சற்றும் அறிகிலேனே
ஆதிபிரம்மமென்று உணர்ந்திலேனே

122 பொய்யாமந்திரப் பொருளோனே
புண்ணியமூர்த்தியைக் காணேனே

123 (அவர்) சங்கையில்லாமல் பூஜைசெய்த
சாளிக்கிராமஞ் சிவலிங்கமும்

124 கையில்தண்டு கமண்டலமும்
கடுகிஎடுத்தவர் கண்ணீரோட

125 துய்யகாஷாயம் மூட்டைகட்டி
தோளிற்போட்டவர் அடைவாக

126 வையகம் அளந்த மாயவர்தன்
மலரடிதன்னைத் தேடவென்றே

127 நாராயணா அபயமென்று
நாடியேஅங்கே தேடிவந்தார்

128 பகலவன்தோன்றி மறைந்தாப்போல்
பந்துஜனங்களைப் பிரிந்தாப்போல்

129 கண்மணிபோன பேர்களைப்போல்
கன்றைஇழந்த பசுக்களைப்போல்

130 மாடம்மாணிக்கம் போனவர்கள்
மனஸ்தாபத்துடன் தேடுதல்போல்

131 செம்பொன்திரவியம் இழந்தபேர்கள்
சோகத்துடன்கூடத் தேடுதல்போல்

132 பொன்னும்அணி பூஷணங்கள்போனல்
பிரமித்துமானிடர் திகைப்பதுபோல்

133 அன்னைதந்தை தனைப்பிரிந்து
அறியாமதலைகள் அழுவதுபோல்

134 கொஞ்சுங்கிளிகளும் அன்னங்களும்
கூடி இனங்களைப் பிரிந்தாப்போல்

135 (அவர்) ஒன்றும்தெரியாது தானுருகி
ஓங்காரப்பொருளைத் தேடலுற்றார்

## ஸ்ரீவாங்கரிஷி பகவான் பாலவடிவைத் துதித்து வருந்துதல்

(2-வது வேறுமெட்டு, உதயராகத்திலும் பாடலாம்.)

136 தளர்நடையுடன் தாளடிகளும்
தாமரை இதழ்போல் நயனமும்

137 இளமையான திருமேனியுடன்
எதிரில்லாத கபோலஸ்தலமும்

138 குறுகிப்பிரிந்த குங்குமத்தோளும்
குணுக்கசைகின்ற பாவனையும்

139 அழகொழுகும் திருமார்புதனில்
அணிந்ததுளஸி மாலையும்

140 புலிநகத்துடன் பூஷணங்களும்
பொன்னும்மாலையும் பதக்கமும்

141 விலையில்லாத சிறுகைத்தளத்தில்
வெண்ணெய்ம்பர மான்னமும்

142 வடிவு இந்தப்படிக்கே என்முன்
வந்தபால முருகனே

143 (என்) இடர்கள்தீரவே மழலைச்சொல்லுடன்
இன்னமொருக்கால் தோன்றிநில்லும்

144 கிண்கிணி கொஞ்சச் சதங்கைகுலுங்கவே
கிருபையுடன் திருக்கூத்தாடும்

145 (என்) செம்பொன்னே முத்தே இந்திரநீலமே
இன்னமொருக்கால் தோன்றிநில்லும்

146 கந்தம்புனுகு வாஸனையுடன்
கீற்றுநாமமும் துலங்கவே

147 இந்தவனத்திலே என்கண்குளிரவே
இன்னமொருக்கால் தோன்றிநில்லும்

·148 குண்டலம்காரை கனகசேவடி
கெட்டிமுத்துபொன் காரைதாழவே

149 ஏங்காமல் இந்த அடியான் முன்னே
இறைவனேவந்து தோன்றிநில்லும்

150 மதாணியுடனே மகரக்குழலும்
மணிமகுடமும் துலங்கவே

151 (என்)கலக்கந்தீரவே இந்தவனத்திலே
கடல்வண்ணாவந்து தோன்றிநில்லும்

152 தொங்கும் சுட்டியும் பொன்னும்பூவும்
சுருண்ட மயிர்க்கத்தை விளங்கவே

153 ஏங்காமல்ஏழை அடியான்முன்னே
இராகவனேவந்து தோன்றிநில்லும்

154 ஒருதாள் தனைத்தூக்கி அழகாய்உறியில்
வெண்ணெய்க்குக் கையேந்திநிற்கும்

155 இருபாததெரிசனந்தந்து
இராமனேநீர்வந்து தோன்றிநில்லும்

156 பாடுங்கனிவாயில் அம்ருதஞ்சிந்தவே
அஞ்சனக்கண்ணைப் பிசைந்தழுதே

157 (எந்தன்) சிவபூஜையில்நின்ற கோலம்போல
இன்னமொருதரம் தோன்றிநில்லும்

158 மதமதென்னவே தயிர்த்திவலைகள்
வந்துமேனியில் தெறிக்கவே

159 தாழியின்பக்கத்தில் தாமரைக்கையேந்தும்
சுவாமியேஎன்முன் தோன்றிநில்லும்

160 கொஞ்சிக்கொஞ்சிப்பேசி வெண்ணெய்தா [வென்னும்
கோபாலருட திருவடியின்

161 அந்தப்பிரதாபமும் ஆண்டவன்சேர்வையும்
அங்கங்குளிரநான் காண்பேனோ

162 இந்தப்பிரபஞ்சமும் ஈரேழுலகமும்
எதிரில்லாதஞானப் பொருள்வந்து

163 தொந்தோமென்றாட இன்னமொருதரம்
ஸ்ரீகிருஷ்ணாஉன்னைக் காண்பேனோ

164 அண்டர்தேடியும் காணாதசெல்வமே
ஆண்டவரே இங்கே தோன்றிநில்லும்

165 பூச்செண்டுகையில் தரித்த மாயோனே
(பரி) பூரணாவந்து தொன்றிநில்லும்

166 குந்தியார்தன் இடர்கள் தீர்த்தோனே
கோபாலாவந்து தோன்றி நில்லும்

167 குன்றால்மாரிமழை தடுத்தோனே
கோவிந்தாவந்து தோன்றி நில்லும்

(1-வது மெட்டுப்போல பாடவேண்டியது.)

168 பக்தரும்இங்கே தான்புலம்பி
பதிதபாவனரைக் காணாமல்

169 சித்திரமான தென்மலையாளம்
திருஅனந்தரைக் தேடிவந்தார்

170 பொற்சலங்கை சலுஞ்சலங்க
பொன்னுங்கிண்கிணி ஓசையிட

171 அற்புதமான பாலகரின்
அடியோசைகேட்டு ஏதுசொல்வர்

172 சொல்லிநடவீரோ சுந்தரரே
தேரின்றிநில்லீரோ எந்தன்முன்னே

173 கல்லைப்பெண்ணுக்கிக் கிருபையளித்த
கமலநயனரே காளமேகா.

(3-வது வேறுமெட்டு.)

(சூர்ணிகை மெட்டிலும் பாடலாம்)

ஸ்ரீவாங்கரிஷி நின்று தரிசனங்கொடுக்கவேணுமென்று
பகவானை இரந்து வருந்துதல்.

174 நில்லாமற்சற்றும் நிந்தித்துப்போனல்
(என்) உள்ளந்தளராதோ உந்திதகிருஷ்ண

175 வண்ணக்கிருஷ்ணனே பாலகோபாலா
வெண்ணெய் ஏந்துங்கை வேணுகானனே

176 இன்பமுடைய லட்சுமிமாதும்
ஏற்றமுடைய முனிவர்தேவாளும்

177 புண்ணியஞ்செய்த யோகிபுருஷாளும்
புத்தியில்வைக்கும் பொற்பாதமூர்த்தி

178 இத்தனை தூரம் வழியும் நடந்தீர்
மெத்தச்சிவக்குமே மெல்லியபாதம்

179 அடியார்க்கெளியனென் றறிந்திடாமலே
அபசாரஞ்செய்தேன் ஆதிதேவனே

180 மெய்ப்பொருள்வந்து விளையாடிநிற்க
(என்) விதிவசத்தாலே அறியாமற்போனேன்

181 ஒருபிழைசெய்தேன் உலகநாயகா
சரியில்லாதொரு சார்வபௌமனே

182 தெரியாமல்செய்தபிழை பொறுத்திடும்
சக்ராயுதா தரணிநாயகா

183 கொடூரமானதோர் சிம்மங்காடிகள்
குழந்தைகளிடம்தன்கோபங்காட்டுமோ

184 ஈன்றபசுமேல் இளங்கன்றுபாய்ந்தால்
எதிர்த்தடிக்குமோ ஏழைபங்காளி

185 சுற்றிலுமுள்ள பூமரங்களா
சுந்திரமூர்த்தி ரூபங்கண்டீரோ

186 பட்சிராஜனே பாபநாசனே
பச்சைமேனியின் பவனிகண்டீரோ

187 பச்சைத்துளசியும் பிச்சிமாலையும்
பட்டுக்குல்லாயும் அங்கியுந்தாழ

188 மற்றுமுள்ளதோர் பாலசோபையும்
வலதுகரத்தில் மகரக்குழலும்

189 கொத்துங்கருங்குழல் கோலமேனியன்
கோமளரூபன் வந்தாரோசொல்லாய்

190 வந்தாரோ சொல்லாய் வனத்துவாஸிகாள்
(என்) மனத்திற்குடிகொண்ட பாலர்வந்தாரோ

191 ஓங்கி அதட்டி நின்றவர்முன்னே
தோன்றுவதில்லையென் றொளித்தாரோ

192 இந்தவனத்தின் மான்கலைகளா
என்னையாண்டவ ரிங்கேவந்தாரோ
193 எந்தத்திக்கிலேபோய் மறைந்தாரோ
என்குலதெய்வமிங்கேகண்டீரோ
194 காதற்கிளிகாள் கரைமனையாரே
சாலைமரத்தின் சோலைக்குயில்காள்
195 பூக்கள்பொன்மணி சிந்தித்திங்கனே
பூர்ணஸ்வரூபர் வந்தாரோசொல்வீர்
196 வந்தாரோசொல்லும் பாலமுகுந்தன்
செந்தாமரையின் வண்டினங்களா
197 மந்தாரைமாலை மாரில் அசைய
மாணிக்கச்சுட்டி நெற்றியில்மின்ன
198 செம்பவழவாய் அதரச்சோபையும்
சற்றேஉம்முட சாயலுங்காட்டி
199 பிருந்தாவனத்தின் வேணுகானனே
வேதநாயகா மெல்லியர்தோழா
200 கொஞ்சுங்கனிவாயின் கோலமழலைச்சொல்
(என்) கோமளரூபா கோபாலகிருஷ்ண
201 அஞ்சினேன் ஹரி அஞ்சினேன் ஹரி
ஆதிமூலமே என்சஞ்சலந்தீரும்.

பகவான் தசாவதாரங்களைச்சொல்லித்துதித்து வேண்டுதல்

(1-வது மெட்டுப்போல் பாடவேணும்.)

சீர்மேவுந்தில்லை யம்பலத்தில் அன்பு சேரக்கும்மிதமிழ்பா

(என்ற கும்மிமெட்டில் பாடலாம்).

202 சூடும்வனமாலை மார்பழகா
துளஸிபூஷண சுந்தரனே
203 கோடிஜன்மம்நான் தபஞ்செய்தாலும்
(உம்ம) கோலங்காண்பேனோ கிரணோ

204 காண்பேனோ உன்றன் திருமுகத்தை
கருணைபொழியும் நயனங்களை

205 வேணுகிண்கிணி பீலிதாழவே
விஸ்வமூர்த்தியின் வடிவழகை

206 பச்சைமேனியும் பவழவாயும்
உச்சிதமாகவே தோன்றிநில்லும்

207 கோபிகள்சோரனே வெண்ணெய்க்காடும்
கோவிந்தாவந்து தோன்றிநில்லும்

208 கோபாலாளந்தன் குருநாதா
(உம்ம) கோபம்நான்சற்றும் அறிந்திலேனே

209 மானிடமைந்தர் போலவே நீர்
பாலகராய்வந்து தோன்றிநில்லும்

210 தேவா உன்றன் மனதிலுள்ள
(நான்) செய்தபிழையை மனம்பொறுத்து

211 ஆழிக்கரசே அலையாமல்என்முன்
அனந்தவீரனே தோன்றிநில்லும்

212 உந்திக்கமலத்தில் பிரம்மன்வர
ஸோமுகன்வேதத்தைக் கொண்டொளிக்க

213 தந்திரமாக அஸுரன்றன்னை
ஸாகரந்தன்னில் விழவடித்து

214 ஈரேழுலகமுந் தான்பிழைக்க
மச்சரூபம் எடுத்தவரே

215 நின்றமந்திரகிரி மத்தாகி
நீண்டவாஸுகி கயிறாகி

216 அன்று அமிர்தம் கடையயிலே
ஆமைரூபம் எடுத்தவரே

217 சொர்ணபூஷண மோகினியாய்
தோன்றிநின்று சபைநடுவே

218 சென்றதேவர்க்கு அமிர்தமீந்த
செந்தாமரைக்கண்ணா தோன்றிநில்லும்

219 பூமியைப் பாயாகத்தான் சுருட்டி
பிலத்துவாரத்தில் போய்ஒளித்த

220 தந்திரமான ஹிரண்யாட்சன்றன்னை
தந்தக்கோட்டினால் விழவடித்த

221 சுந்தரரூபச் சேதியனே
துய்யலக்ஷ்மியின் நாயகனே

222 வராகமூர்த்தி யானவனே
வந்து என்முன்னே தோன்றிநில்லும்

223 திருப்பாற்கடல் மத்திதன்னில்
சேஷனையின்மேல் பள்ளிகொண்ட

224 ஸ்ரீஹரியைத்தேடி தேவேந்திரன்
தேவரெல்லோரும் ஸ்தோத்தரிக்க

225 அப்போதுவந்து அவதரித்தீர்
அசுரர்குலங்களை வேரறுக்க

226 நரஸிங்கமூர்த்தி யாகவந்து
நம்பினபக்தர் இடர்தீர்த்து

227 துஷ்டஹிரண்யனை சம்ஹரித்த
ஜோதிரூபனே தோன்றிநில்லும்

228 பக்தாள்வினைதீர்க்க வேணுமென்றே
பாரேழுங்கீர்த்தி தான்விளங்க

229 அஷ்டதிக்குப்பாலாள் வாழவென்றே
அகிலம்ஈரேழும் தான் அளிக்க

230 துஷ்டாள்வதம்பண்ண வேண்டுமென்று
திருவிக்கிரம வடிவுகொள்ள

231 பொட்டெனச்சென்று அதிதியர்க்கு
புத்திரனாக அவதரித்து

232 மகாபலியுட சாலைபுகுந்து
பாலகராகி மண்ணளந்தீர்

233 வஞ்சனையாக வளர்ந்தளந்த
வாமனா வந்து தோன்றிநில்லும்

234 பரசுராமனாய் வந்துதித்து
பக்தியுள்ளதோர் வேதியர்க்கு

235 தபஸுசெய்தே அடிபணிந்து
(சிவ) சங்கரர்கையில் அஸ்திரம்வாங்கி

236 அரசர்குலத்தின் வேரறுத்து
அகிலமெங்கும் கீர்த்திமிகவிளங்க

237 குருதியிற்தர்ப்பணந் தான்முடித்த
கோபாலாவந்து தோன்றிநில்லும்

238 தோன்றினபின்பு தசரதர்க்கு
சூரியவம்சம் செழிக்கவென்றே

239 பூரணாவதார மாகிவந்து
பூமிபாரங்கள் நீக்கிவைத்தீர்

240 சீதைமணவாள ரகுவீரா
ஸ்ரீராமாவந்து தோன்றிநில்லும்

241 பரிவுடன்வந்து ரோகிணிக்கு
பலராமனாய் அவதரித்து

242 பங்கயத்தோழர் தன்னுடனே
பாங்காய்விளையாடிக் கோகுலத்தில்

243 கலப்பையாகிற ஆயுதத்தால்
கவியினங்களைத் தான் அடித்து

244 மங்களமான மார்பழகா
மாயவரேவந்து தோன்றிநில்லும்

245 வந்து தேவர்கள் முறையிடவே
வஸுதேவருக்கு மைந்தராகி

246 நந்தகோபர் குமாரனுமாய்
நல்லஆயர்பாடியில் வளர்ந்து

247 பங்கயத்தோழர் மனம்மகிழ
பசுமறித்தங்கேவிளையாடி

248 செங்கையிற்றன் சிறுகோலேந்தி
செம்பொன்வேணுவும் தோளில்சாத்தி

249 எங்கும்நிறைந்ததோர் தோழருடன்
யமுனைக்கரையிலே நின்றகோலமாய்

250 இன்னமொருக்கால் என்கண்குளிர
மீண்டும் முன்வந்து தோன்றிநில்லும்

251 பார்த்தசாரதி யாகவிருந்து
பரிவுடன் அந்தத்தேரேறி

252 கூற்றுவர்போன்ற நூற்றுவராம்
குருஜனங்களை விழவடித்து

253 வேதசாஸ்திரஉப தேசமுடன்
விஸ்வரூபங்காட்டி விஜயனுக்கு

254 தேர்த்தட்டின்மேலே நின்றகோலமாய்
ஸ்ரீகிருஷ்ணஎன்முன் தோன்றிநில்லும்

255 பூமியிலுள்ள புழுதிகளெல்லாம்
புத்தியில்தெரிந்து எண்ணிடலாம்

256 என்ஆதிஅய்யன் செய்த அவதாரம்
ஆராலும்எண்ணி முடியாது

257 சேவிக்க அரிதான திரவியமே
சென்மஸாகரம் தீர்ப்போனே

258 சேவிக்கவறியாமல் உம்மை நானும்
ஜனனமரணத்தால் மிகத்தளர்ந்தேன்

259 மாதாவின் முலைப் பால்குடித்து
மறித்தும்நானிங்கே பிறவாதே

260 ஆவிக்கரசேநான் அலையாமல்
அனந்தவீரனே தோன்றிநில்லும்

261 சிந்தைக்கறியாத மேனியனே (நான்)
திரும்பக்கலியினில் பிறவாதே

262 ஆதியந்தமில்லா சுந்திரனே
ஆதிமூலமே தோன்றிநில்லும்

263 அறிவாந்தகார இருள்நீங்க
ஆதித்தனைத் தோன்றிநில்லும்

264 மந்தஹாச முகத்தோனே
மாய்கைநீக்கும் என் மாதவரே.

## ஸ்ரீவாங்கரிஷி பகவான் பாகவதலீலையைச்சொல்லி துதித்தல்.

உன்னாலேயல்லவோநான் உலகத்தையாள்வது சகுனிமாமா
என்பதுமெட்டு.

265

பூபாரந்தீர்க்கவென்றே பூமியும்முறையிட வாஸுதேவா
(உம்முட) ஸ்ரீபாதம்மறவாது சிந்திக்கஅருள்செய்யும் வா
தேவகி உதரத்தில் தேவர்போற்றிடவந்தீர் வா
(எந்தன்) நாவிலேஉன்திரு நாமத்தை அருள்செய்யும் வா
வஸுதேவதேவகிக்கு மைந்தராகப்பிறந்தீர் வா
(என்) பசுபாசந்தனைப்போக்கி ஜகப்பற்று அறுத்திடும் வா
சிசுவை எடுத்தணைத்து திருக்கோகுலம்வந்தார் வா
(நான்) பிறவாமுக்திபெற்றுப் பிழைத்திடவழிசொல்லும் வா
நந்தர்யசோதையின் மைந்தராகி வளர்ந்தீர் வா
(என்னை) நிந்தனைசெய்யாமல் நின்றருள்செய்திடும் வா

270

கர்க்காசாரியார்வந்து ராமகிருஷ்ணநாமந்தரித்தார் வா
(சுவாமி) சற்கதிதந்து தயைபண்ணி ரட்சியும் வா
வீரப்பிரதாபரான் பலபத்ராமருடன் வா
ஆயர்பாடிதன்னில் அமர்ந்துலீலைசெய்த வா
ஸ்தன்யபானங்கொடுத்து சதிபண்ணு பூதகியை வா
(உம்ம) வாயினால்அவளுயிர் வாங்கியேவதைத்திட்ட வா
பேச்சிமுலையுண்டு பூதகியைக்கொன்றீர் வா
ஞானக்காட்சிதனைத்தந்து கண்பார்த்து இரட்சியும் வா
சகடைஉதைத்த செந்தாமரைமலரடியை வா
(அரை) நிமிஷமும்பிரியாமல் நினைத்திடஅருள்செய்யும் வா

275

மண்ணைத்தின்றன்னை கை மத்தாலடியுண்டீர் வா
கண்ணைப்பிசைந்தழும் காருண்யமானுஷா வா

அன்னைக்குப்பிரமாண்டம் ஆவென்றுகாட்டினீர் வா
(உம்ம) மகிமைதனைக்கண்டு மகிழ்ச்சி அடைந்திட வா

மகிழ்ச்சிஅடைந்து மாதாமறுபடியவள்பார்க்க வா
மாய்கையைஏவி மனதைக்கலங்கவைத்தீர் வா

அம்புலிமானை யழைத்துத்தாவென்றுசொன்னீர் வா
அப்பாவாராததுவென்று மாதாஉரைத்திட வா

கொஞ்சியேஅம்மையுடன் கூப்பிடுவருமென்றீர் வா
அன்னையங்கம்புளகித்து சந்திரனையழைக்க வா

வானத்து அம்புலியை வாவென்றுதானழைத்த வா
பொங்கிமனமகிழ்ந்த அன்னையும்பார்த்திட வா

சந்திரபகவானும் தன்னருகில்வர வா
தயவுடனேபார்த்து சத்காரம்பண்ணினீர் வா

சீதளபகவானும் உமது தயவுதனைப்பெற்று வா
தன்னுடையமண்டலம் தானும்போய்ச்சேர்ந்திட்டார் வா

உரலுடன்சேர்த்து யசோதையாற்கட்டுண்ட வா
மருதமரத்தையுதைத்து நளகூபரைக்காத்த வா

சுழற்காற்றஸுரனை (அவன்) தோள்மேலேறிக்கொன்றீர் வா
தாபத்திரயக்காட்டிலலையாமல் தயைபண்ணி.இரக்ஷியும் வா

தந்தைதாய்மகிழ்ந்திடத் தவழ்ந்துவிளையாடிய வா
(என்) சிந்தைவிட்டகலாத திருவடிஎனக்கருளும் வா

(சோதை) அட்டாணிங்கூடத்தில் அழகாய்த்விழ்ந்திட்ட வா
(சுவாமி) சப்பாணிகொட்டியே தத்தடியிட்டிடும் வா

அங்காடிகொள்ளவே அம்மையார்க்கருளிய வா
(உம்ம) செங்கையிலாழிமின்ன ஜம்பூபலம்வாங்கும் வா

கொக்காஸுரன்வாயைக் கோரைபோற்கிழித்திட்ட வா
(சுவாமி) சற்கதிதந்து தயவுபண்ணிரக்ஷியும் வா

கன்றுபோல்வந்த அஸுரனைமடித்திட்ட வா
(நான்)குன்றுப்பிரமாணஞ்செய்த குற்றங்கள்பொறித்திடும் வா

290

காட்டுதீயைவிளை யாட்டுப்போல்விழுங்கின் வா
சோகம்போட்டயசோதையை மீட்டும்இரக்ஷித்த வா

இந்திரன்பூஜையை மலைதனக்கேயிட்ட வா
தந்ததோர்மழைக்க கோவர்த்தனம்தாங்கினீர் வா

வனத்துக்குபசுமேய்க்கப் பாலருடனேழுந்த வா
கோபாலருடன்பசுக் கூடியேமேய்த்திட்ட வா

மலைப்பாம்புஅஸுரனை வாகாய்ப்பிளந்திட்ட வா
(நான்) அலைவாயின் துரும்புபோல் அலையாமல்ரக்ஷியும் வா

மணற்குன்றில்ததியன்னம் இராமருடன்புஜித்த வா
(என்) அனல்போன்றபாவத்தை அகற்றிஅருள்செய்யும் வா

295

பிருந்தாவனமிருந்து வேணுகானஞ்செய்த வா
காளிங்க சர்ப்பத்தின் கர்வமடக்கிய வா

தேனுகாஅஸுரனை சிதறிவிழவடித்து வா
பனையேறிப்பழங்குலுக்கி கோபாலர்க்கருளின வா

அந்தணர்யக்ஞத்தில் அன்னங்கேட்டனுப்பிய வா
(அந்த) நங்கைமார்கொண்டுவந்து நன்றாகக்கொடுத்திட வா

செங்கையினுல்வாங்கி திருப்தியாய்புஜித்திட்ட வா
அந்தசுந்தரிமார்கட்க்கு சாயுஜ்யமளித்திட்ட வா

ராஜக்கிரீடைசெய்து இரத்னம்போல்விளங்கின வா
(என்) பாசம்விலக்கியே பதந்தந்துரக்ஷியும் வா

300

சரத்காலராத்திரியில் கோபியர்முன்னேவிளங்கிய வா
(என்) மனக்காவலாயிருந்து மன்னித்துரக்ஷியும் வா

மணற்குன்றில்விளையாடி முரளிகானஞ்செய்த வா
வருணலோகஞ்சென்று நந்தகோபரைமீட்டுவந்த வா

மேகம்போல்வந்த ரிஷபாஸுரனைக்கொன்ற வா
(நான்) காகம்போல்பறவாது கண்பார்த்துரக்ஷியும் வா

சங்கசூடஸுரனை சிதறவிழவடித்த வா
(சங்கன்) முடியின்மணிவாங்கி பலராமருக்களித்த வா
குதிரையாய் வந்திட்ட கேசியைவதைத்திட்ட வா
எதிர்வந்துஎளிதாகச் சேர்வைகள்தரவேணும் வா

305

நாரதர்வந்திட நற்பூஜைசெய்திட்டீர் வா
நீருண்டமேகமேனி (என்) நினைவில்வரவேணும் வா
அக்குரூரர்வந்து மதுரைக்கழைத்திட வா
(உம்ம) அரிதானசேர்வை எளிதாய்தரவந்த வா
(கோபியர்) சிந்தைக்கலங்கிடத் தேரின்மேலேறினீர் வா
(அவர்க்குத்) திடஞ்சொல்லிஎழுந்த சின்மயரூபியே வா
மணித்தேரிலேறிய பலபத்திரராமருடன் வா
(யமுனா) நதிக்கரையில் வந்தீர் அக்குரூரர்கூடவே வா
ஜலத்திலே திவ்ய ஸ்வரூபத்தை தரிசித்தார் வா
தேவதிதேவரென்று அக்குரூரர்துதித்திட வா

310

மணித்தேரிலேயே பலராமமூர்த்தியுடன் வா
(பூங்கா) வனத்திலேஇறங்கியே மனதுமகிழ்ந்திட்ட வா
பாயகன்செய்திட்ட பணிவிடைக்கு மகிழ்ந்து வா
(அவனைத்) தோழமைகொண்டு சுகமருளிச்செய்த வா
தையலாகியகூனி சந்தனம்பூசவே வா
(அவள்) மெய்யின்கூனல்நிமிர்த்தி மேலாம் பதங்கொடுத்த வா
மாலாகரன் தந்த மாலையைச்சூடினீர் வா
மேலானபதந்தந்து வேண்டும்வரங்கொடுத்தீர் வா
கோலமேனிதன்னில் குளிர்ந்தமலர்சூடி வா
சால்வைஉருமாலுடன் சரிகைவேஷ்டிகளெல்லாம் வா

315

வழிமறித்து வண்ணானை வையடாகீழேஎன்றீர் வா
(அடா) மாடுமேய்க்கும் இடையா மாகாராஜன் வேஷ்டி என்க வா

ஊகவன்ஞ்ன் சொன்ன உதாசினங்களைக்கேட்டு வா
மரியாதையில்லாத வண்ணானைக்கொன்றிட்ட வா
வெண்பட்டுவேஷ்டியுடன் விலையில்லாஉத்தரீயம் வா
அன்புடன் ஏழைகட்கு அடைவுடன் வழங்கினீர் வா
அண்ணனிராமருடன் ஆயுதச்சாலைபோய் வா
கண்ணாரவிளையாடி கம்ஸன்வில்லை முறித்தீர் வா
வில்லைமுறித்துவிட்டு வீரர்களைஜெயித்த வா
மல்லுயுத்தம்பண்ணி மல்லர்களைவதைத்த வா

320

ஆனைகட்டியவாசல் அழகாய்எழுந்தருளி வா
குவலயாபீடத்தின் கொம்புதனை முறித்த வா
நாணமில்லாக்கம்ஸன் நல்மஞ்சம்ஏறியே வா
அவனுணுவங்குலையவே அவனைமிதித்தேறி வா
கம்ஸனைக்கீழேதள்ளி காலினால்தொகைத்திட்ட வா
(அவன்) கொஞ்சும்மணிமுடியை குலையவதைத்திட்ட வா
கம்ஸன் ஆவியிழந்திடத் தேவிமார் கதறிட வா
தேறுதல் சொல்லியேசெய்யுங் தருமஞ்செய்தீர் வா
உக்கிரசேனராஜாவை ஒருமையுடன்தேற்றின வா
உயர்ந்த சிம்மாஸனத்தை உகந்தவனுக்கீந்தீர் வா

325

வசுதேவதேவகியை மரியாதையுடன்கண்டு வா
(அவாள்) கடினக்காவலைநீக்கி காட்சியளித்திட்ட வா
ஆடையுடனேசொர்ணம் வாரிவழங்கியே வா
சேனையுடன்கூடத் திரும்ப கோகுலம்வந்தீர் வா
கோபாலருடன்கூடக் கூடாரம்வந்திறங்கி வா
(நந்தர்) கொண்டுவந்தஅன்னத்தை கோபாலருடனுண்ட வா
நந்தர்சோதையுடன் தந்தையுடன்கூடி வா
வந்துமதுராபுரி மகாராஜாசபைவந்தீர் வா

உபநயனம்பண்ணிக்கொண்டு உற்றாருடன்வாழ்ந்தீர் வா
சாந்தீபமுனியிடம் சகலவித்தையுங்கற்ற வா
தமையனுடன்கூடி சாந்தீபரைப்பணிந்த வா
ஓதியகுருவுக்கு தக்ஷிணையளித்திட்ட வா
(என்) புத்திரசோகத்தைப் போக்கிவிடுமென்று வா
(பிள்ளை) மரித்தவிடத்தின் வழிதன்னைக்காட்டிட வா
மச்சாஸுரனை வதைத்தவனைப்பிளந்து வா
சங்கமெடுத்துத் தடங்கையில் ஏந்தினீர் வா
மைந்தனைக்கொண்டுவந்து மகரிஷி முன்னேவிட்டு வா
புத்திரசோகத்தைப் போக்கிஅருள்செய்த வா
லக்ஷ்மியாகிய ருக்மிணிதேவியை வா
பக்குவமாகவே பாணிக்கிரகணஞ்செய்த வா
சிஷ்டபரிபாலனம் துஷ்டநிக்கிரகஞ்செய்த வா
அஷ்டலக்ஷ்மியுடன் இஷ்டமுடனிருந்த வா
விஷயக்கயிற்றைக்கொண்டு வினோதமாய் விளையாடும் வா
பகடையாடும்போது பாஞ்சாலிக்கருள்செய்த வா
பார்த்தன்தேரிலிருந்து (கீதா) சாஸ்திரமுரைத்திட்ட வா
நூற்றுவரைவதைத்து கீர்த்திவிளங்கிய வா
யாதவகுலத்தினில் ரத்தினம்போல்விளங்கிய வா
மாதவா உத்தவர்க்கு தத்துவப்பொருள் சொன்ன வா
பாண்டவர்க்கருள்செய்த பரமபதவாஸா வா
வேண்டினேன் உன்பாதம் முன்னின்று காத்திடும் வா

## ஸ்ரீவாங்கரிஷிபகவான் கலியாணகுணங்களைச் சொல்லித் துதித்து வேண்டுதல்.

(4-வது மெட்டு; தாலாட்டு மெட்டிலும் பாடலாம்.)

ஸ்த்வரஜோதமமாகி சத்வகுணமூர்த்தியுமாய்
இஷ்டமுடன் லீலைசெய்யும் யசோதைபுத்திரனாய்
சிருஷ்டிஸ்திதிப்பொருளாய் இரக்ஷிக்கும்கர்த்தனுமாய்
வஸ்துஉருவாகிநின்ற மதனகோபாலனன்றோ
ஆதாரமாகிமனைத்துயிர்க்கும் சாக்ஷியுமாய்
(என்) மாதவமாம்தீபம் மறைந்தொளித்தாலெப்படியோ
பழுதையைப்பாம்பென்று பயந்தமனிதருக்குத்
துணைவிளக்காய்நின்றுமல்லோ சோகந்தணிப்பதுவும்
இனியிரக்கமன்றியிலே இப்படிநீர்போய்மறைந்தால்
(உம்ம) கடும்வழியைக்காண காரணரே நானறியேன்
மனதின்அழுக்காலும் மாய்கைமறைப்பாலும்
அறிவிழந்தேன்ஐயாவே அண்டமெல்லாம் உண்டவரே
அண்டமளந்து அன்பாலும்தான்வளர்ந்த
திண்டோள்மணிமகுடம் துலங்கவிங்கேவாருமையா
அலையாதேஎன்று அபயஸ்தந்தான்கொடுத்து
ஹிருதயத்துரோபதைபோல் ஈடேற்றவேணுமையா
நம்பினபேரை நடுக்கடலில் தள்ளுவரோ
தர்மமாய்வந்துதித்த சாந்தகுணமூர்த்தியன்றோ
அடியாரைக்காக்கும் யசோதாபுத்திரனே
ஸ்ரீ கெருடவாகனனே ஜென்மம்அறுத்தோனே
அம்புஜலோஜனரே ஆழிதரித்தோரே
பங்கஜநேத்திரனே பாற்கடலில்பள்ளிகொள்ளும்

சங்ககரத்தோனே சாரங்கபாணியனே
கண்குளிரஎன்முன்னே கடல்வர்ணாதோன்றிநில்லும்
இந்திராதிதேவருடன் ஏற்றமுள்ளநான்முகரும்
வந்தனைகள்செய்யும் மணிவண்ணாதோன்றிநில்லும்
கானலைத்தண்ணீரென்று கலங்குகின்றமானிடர்க்கு
தானே அமிர்தமுமாய்த் தாபந்தணிப்போனே
அளவிடப்போகாத ஆனந்தநிஷ்களனே
நினைவழிந்துசொல்லிவிட்டேன் நிர்மலனே தோன்றீரோ

பலகாலம்பூஜைசெய்தேன் பரமனைக்காணவேண்டே
அணுமாத்திரந்தவறிப் போனேன்நான் ஆதியனே
பொன்னின்ஒளிபோலும் பூவின்மணம்போலும்
என்னுக்குள்ளண்ணையைப்போல் எங்கிலுமாய்நிற்போனே
அறியாதபேர்களுக்கு அகலநிற்குமாப்போல
கடுமாய்கைஎவிஎன்றன் கண்ணுக்கொளிந்துவிட்டீர்
ஜிதேந்திரியரான ஜீவர்கட்குத்தோன்றிடுவீர்
பேதங்களற்ற பெரியோரிடம்உறைவீர்
ஆசையினாலும்மை அடியேன் அறியவேணும்
(என்) மாய்கையைநீக்கி மணிவர்ணாதோன்றிநில்லும்

மருவும் அமிர்தமுமாய் மறுகரையில்லாதவராய்
பெருகினதியாகி பேதமற்றவஸ்துவுமாய்
அறியமறைப்பொருளாய் ஆத்மஸ்வரூபருமாய்
முக்குணமுமாகி நிர்மல முக்திப்பிரகாசருமாய்
இந்திரியதேவதையாய் ஹிருதயத்தின்மூர்த்தியுமாய்
ஐந்துமுதற்சேதனர்க்கும் ஜீவாத்மாவாகிநின்றீர்
கோடிதபம்செய்தேன் குருபக்திதன்னாலே
தேடியுங்காணறியேன் செங்கமலப்பொற்பாதம்

ஏழைஅடியேன் இருந்துபுலம்புகிறேன்
பாலமுகுந்தா பட்சமுடன் காருமையா
365 முன்பேசிவைப்பு முகுந்தனே உன்பாதம்
இன்னுங்கடுஞ் சிவப்பாய் இத்தனை தூரந்திரிந்திர்
மின்னுங்கருடன்மேல் வீற்றிருக்கும் உன்பாதம்
பொன்னடியுந்நோகாதோ போதுமிங்கேவாருமய்யா
ஆக்கமுடையான் அமுர்தகடைக்கண்ணன்
காத்தமுதலைக் கைநழுவத்தள்ளுவரோ
சந்நியாசயோகந்தவறியே போய்விழுந்தால்
பின்னேஎனக்குப் பிழைப்புண்டோ மாதவரே
என்னபிழைசெய்தாலும் என்றனைநீர்காத்தருளும்
பொன்னேகிருபையுடனே பூர்ணதயைசெய்யுமையா
370 பங்கஜபுஷ்பங்கள் (உம்ம) பார்வைக்குநாணிநின்று
அங்கேபகவான் அடிமலரைக்காண அஞ்சி
தங்களினங்கூடத் தலைகுனிந்துலஜ்ஜையுடன்
தடாகமத்தியிலே தான்குனிந்துநின்றதுகள்
தங்கப்பணிகலெல்லாம் தலைகுனிந்துலஜ்ஜையுடன்
(உம்ம) சங்குவரிக்கழுத்தில் தாழ்ந்தொளிந்துநின்றனவே
அங்கியும்மின்ன அழகுத்தினக்கண்ணருக்கு
செங்கதிரோன்கூடச் சேர்ந்திருக்கக்கூசுவனே
கண்கள்தாம்கொள்ளாத கபோலஸ்தலவழகும்
கண்ணாடிபோன்ற காந்திபுள்ளமேனியனே
375 உன்னதழகும் உபயவிழியழகும்
(என்) மன்மதரூபா வருகவருகவிங்கே

ஸ்ரீவராங்கரிஷி பகவானைத் துதித்துக்கொண்டே நடந்து அனந்தங்காடு அடைதல்.

(1-வது மெட்டுப்படி சொல்லவும்)

376 அமிர்தமயமானபரமானந்தர்
அம்சத்தால் மூன்றுகுணமாகி
377 நிமிஷந்தன்னிலே லீலையாக
நிர்மாணம்பண்ணி நீடுலகை

378 அவனிதனக்கொரு அதிபதியாய்
ஆதாரமான அரசனுமாய்

379 புவனம் நிறைந்த என்நாதன்போனால்
பூலோகமெங்கும் கலங்காதோ

380 பரமாத்மரூபா பரஞ்சோதியே
பரிவுடன் இங்கே தோன்றிநில்லுமே

381 ஆழிசூழ்ந்திடும் லோகமுதல்
அந்தரிக்ஷமும் பாதாளமும்

382 வானுலகும் சந்திரசூரியரும்
வானவர்க்கும் முதல்வன்தானாகி

383 நாபிக்கமலத்தில் அயனைப்பெற்ற
ராஜனே வந்து தோன்றிநில்லும்

384 என் ஆவிபோகுது வாருமென்றன்
அனந்தவீரனே என்றலற்றி

385 மனந்தளர்த்திடக் கண்ணீர்சோர
மனோவேகத்திலும் வெகுவேகமாய்

386 அனந்தங்காட்டிலே வருகும்போது
அங்கேயொருபள்ளி எதுசொல்வள்

387 சென்னெல்விளைபூமி களைபறிக்க
சேர்ந்து கணவனும் தானுமாக

388 (அவள்) சின்னப்பாலகன் தானழுவே
சீறியேஒரு வார்த்தைசொல்வள்

389 என்னைநீயொன்றும் செய்யொட்டாமல்
இங்ஙனேகரைந் தழுதாயானால்

390 உன்னைநானிந்த அனந்தங்காட்டில்
தூக்கியேவீசி எறிவேனென்றாள்

391 சிறிஉரைத்திட்ட வார்த்தைகேட்டு
ஸ்ரீகிருஷ்ணமூர்த்தி சிரித்துகந்தார்

392 அன்புடன்பள்ளி முகம்நோக்கி (ரிஷி)
அனந்தங்காடெங்கே உரையுமென்றார்

393 இதற்கப்புறந்தள்ளி அனந்தங்காடுனென்று
அடையாளங்களைப் பள்ளிசொன்னாள்

---

பகவான் அனந்தங்காட்டில் பெரிய உருவததுடன் சயனம்பண்ணி தரிசனங்கொடுத்தல்.

394 சித்தங்கலங்கிய தவமுனிக்கு
முக்திகொடுக்கவே பகவான்எண்ணி

395 பக்திசோதித்த பரமானந்தர்
பரமகிருபைபண்ணி திருமனதில்

396 குங்குமப்பூச்சுங் குமுகுமென்ன
கோபாலருட நடையசைய

397 ஆதிநாதன் கிருபையுடனே
அனந்தபுரத்தின் நடுவேவந்தார்

398 விஸ்தாரமான கையின்கோலும்
வெண்ணெய்க்கேந்தின கைத்தளமும்

399 அச்சுதருட திருநாமமும்
அரைவடத்துடன் கிண்கிணியும்

400 கொத்துச்சதங்கையும் சலுஞ்சலென்க
குதித்துக்குதித்துக் கோபாலராடி

401 மற்றும் இலுப்பை மரத்திடையே
மதனகோபாலர் மறைந்துநின்றார்

402 வாதாடிவந்த திருநடையும்
வண்ணக்கிண்கிணி ஓசைகளும்

403 ஆதாளிஅரவம் கேழ்க்காமல்
அந்தஸ்ரீவாங்கள் மிகநடுங்கி

404 மாருதிதொழும் மார்பழகா
மாயமோநீர் மறைந்ததும்

405 என்நாதன்மறைந்த இடமிதுவேஎன்று
நாடியேஅங்கு பார்க்கலுமே

406 ஏதென்றறிந்தபின் போவோமென்று
ஏங்கிஅவராங்கே நிற்கலுமே

407 சாந்தும் புனுகுஞ் சந்தனமும்
சாதிபுஷ்பங்கள் பரிமளிக்க

408 மோதிஆகாசம் மட்டுமுயர்ந்து
மிகுந்தகிளையுடன் விழுதுவிட்டு

409 சாங்கியசாஸ்திரம் வேராகி
தருமங்கள்எல்லாம் இலையாகி

410 ஓதும்வேதங்கள் பூவாகி
உற்றகல்பங்கள் காயாகி

411 நாலுவேதப் பழத்தைக்கொண்டு
நான்முகனென்னும் கிளிமுகக்க

412 ஹேதுவில்லாமல் அத்திசையில்
இடிமுழக்கம்போல் ஓசையிட

413 ஆதிகாலத்து இலுப்பமரம்
அனந்தங்காட்டிலே விழுந்ததப்போ

414 விருக்ஷமானது கீழ்விழவே
மெள்ளவந்தங்கே ஸ்ரீவாங்களும்

415 (என்) பக்தியறிந்த பரமன்தானோ
பார்ப்பேனோவென்று பரிசுழன்றார்

416 திட்டெனச்சென்று பர்க்குமளவில்
சிந்தைகுளிரவே கண்டுகொண்டார்.

## ஸ்ரீவாங்கரிஷி பகவானைத் துதித்தல்.

(தாலாட்டு மெட்டு)

417 சிந்தை குளிரவிந்த தெரிசனை நான் காணவென்றால்
இந்திரனைப்போல் நயனம் எந்தனுக்குத் தந்திலையே
418 தந்திலையே சோலைதனைமந்தர தாமரைபோல் ஆயிரங்கண்
இந்த தெரிசனைக்கு இரண்டுகண்கள் போதாதே
419 திருவளந்தூர் முடிதாழ்த்தி திருப்பாலூர் கால்நீட்டி
மருவுதிரு வலதுகையால் மணிமுடிக்கு அணைசேர்த்து
420 தயவுடைய தாமரைகண் சந்நியாசி முகம்நோக்க
பரிபூரணக் கிருபையுடனே பாம்பணைமேற்பள்ளிகொண்டார்.

(1-வது மெட்டுப்போல் சொல்லவும்.)

421 தேவர்முனிவர்கள் சித்தர்களும்
திக்குப்பாலகரும் கின்னரரும்
422 ஆதிநாதர் திருமுடிக்கு
அன்புடன்புஷ்ப மாரிசொரிய
423 சோதிச்சுடரொளி போல்விளங்கும்
சுந்திரத்திரு மேனிமின்ன
424 பிரகாசிக்கும் முகமண்டலமும்
பச்சைமேனிகள் பளபளென்ன
425 (என்) நாதன் இடையில் பீதாம்பரமும்
நவரத்தின அரைஞாணும் சோதிவிட
426 அரைச்சதங்கையும் ஒளியழகும்
ஹாரம்மணிமுத்து மாலைகளும்
427 ஆலந்தளிரொத்த திருவயிறும்
அமைந்த அங்கியும் பின்னழகும்
428 பாரமரகத மணிமுடிமேல்
பத்மநாபன் கிரீடம்மின்ன
429 ஐந்துபடத்தாலே அனந்தர்வந்து
ஆதிநாதர்க்குக் குடைபிடிக்க

430 கஞ்சமலரொத்த பாதசேவை
கண்குளிரவே கண்டுகந்தார்

431 உகந்துமேஅந்த ஸ்ரீவாங்களும்
ஓங்காரப்பொருளைப் பணிந்தார்

432 எழுந்திடும்வேளை எப்போவென்று
ஏற்றிநிற்கவே பக்ஷிராஜன்

433 பூமலர் தூவி அனைவர்களும்
போற்றி போற்றி என்றடிபணிய

434 சியாமளரூபர் சன்னதியில்
தவளச்சங்கங்கள் ஊதிநிற்க

435 அன்னம்விளையாடத் தென்றல்வீச
ஆயர்பாடிக்கிருஷ்ணன் கண்வளர

436 பொன்னுலகம்போல் அனந்தங்காட்டில்
புருஷோத்தமரும் கண் வளர்ந்தார்

437 அங்கம்புளகித்து ஸ்ரீவாங்களும்
அனந்தபத்மநாபரை ஸ்தோத்திரிப்பார்

438 பனிபோய்இருள்நீங்கிப் பாஸ்கரனும்
பாருலகில்வந்து உதித்தாப்போல்

439 ஓடைக்கமலங்கள் ஒரு நொடியில்
உள்ளங்குளிர்ந்தங்கே மலர்ந்தாப்போல்

440 வாடும்பயிருக்கு மழைபொழிந்து
மனோகரமாகக் குளிர்ந்தாப்போல்

441 தேடும் பூமியில் திரவியங்கள்
தரித்திரன்கையில் கிடைத்தாப்போல்

442 அஞ்சனக்காரன் வெகுதனத்தை
ஆருமறியாமல் எடுத்தாப்போல்

443 தஞ்சமென்றங்கே எடுத்தணைக்கும்
தாயைக்குழந்தைகள் கண்டாப்போல்

414 கொஞ்சுக்கிளிகளும் அன்னங்களும்
கூடி இனங்களைச் சேர்ந்தாப்போல்
445 சஞ்சலம்நீங்கியே கைகைக்கூப்பி
சாஷ்டாங்கமாக நமஸ்கரித்தார்

(2-வது மெட்டுப்போல் பாடவும்.)

446 அனந்தங்கோடி ஜென்மமொழித்து
அழியேனிடர்களைத் தீர்த்தோனே
447 தினந்தோறும்நான் தேடியசெல்வமே
ஸ்ரீகிருஷ்ணவந்து உதித்திரே
448 வஞ்சனையாகக் கஞ்சனைவதைத்து
வந்துலீலைகள் செய்தாரோ
449 அஞ்சனவண்ணனே ஆதிமூலமே
அன்புடன் இங்கே உதித்தீரே
450 முனிவர்கள் இருடியர் மூர்த்திமூவர்கள்
முப்பத்துமுக்கோடி தேவர்கள்
451 இனியலக்ஷுமி தேடியசெல்வமே
என்முன்னேவந்து உதித்தீரே
452 ஹரிஎன்றதுணை காணமல்பக்தன்
அலைகிறனென்ற கிருபையுடனே
453 சரியில்லாதகே பால மூர்த்தியே
(இந்த) தாதுவில்வந்து உதித்தீரே
454 ஆப்தபந்துவைக்காணமல் பக்தன்
அலைகிறனென்ற கருணையால்
455 மஹாத்மாவேஎன் பாலமுகுந்தரே
**(இந்த) வனந்தன்னில் வந்து உதித்தீரே.**

## ஸ்ரீவாங்கரிஷி அனந்தபத்மநாபரைப் பூஜித்தல்.

(அகவல் மாதிரி சொல்லலாம்,)

456 அகல கில்லுமென்று சொன்னேன் ஆதிமூலப்பொருளே
நிர்மலரே நானுமும்மை நித்தியரென் றெண்ணுதே
457 அடியேன் அபசாரம் செய்துவிட்டேன் ஆண்டவரே
பொருத்தருள வேணுமய்யா புண்ய புருஷோத்தமரே
458 சகித்தருள வேணுமய்யா சகலகுண சம்பன்னரே
இலங்கும்பணிகள் தரித்த இருபாத பங்கஜரே

459 இரங்யே கலங்கி மனமயங்கி நின்றவேளையில் நான்
அலையாமல் வந்துதித்த அனந்தபத்மநாபரன்றோ (என்று)
460 தீர்க்கமுள்ள மேனியனைத் தெண்டங்கள் பண்ணியவர்
மார்க்கமுடன் முககாதம் வந்து பிரதக்ஷணமாய்
461 காக்ஷியுடன் பூஜைபண்ணக் கையிலொன்றுமில்லாமல் [தான்
பார்த்திருக்கும் வேளையினில் பட்டணத்துச் செட்டிவந்
462 அவன் ஒற்றைபுடுத்துக் கோடித்துணி போர்த்து
பெற்றெடுத்த தந்தைக்கு பிதுர்கர்மஞ் செய்யவென்றே
463 பச்சரிசி தன்னுடனே மாங்கனியும் வைத்திருக்க
செட்டிகையில் வாங்கியந்த ஸ்ரீவாங்கள் பூஜைசெய்தார்
464 சுத்தி மணிகுலுக்கி தூபதீபங் காட்டி
பக்தியுடன் நைவேத்தியம் பாங்குடனேசெய்துமவ
465 அல்பக்கனி அரிசி அமுதுசெய்ய வேணுமென்க
பத்மநாப ஸ்வாமி பரிவுடனே அமுதுசெய்தார்.
மணிமகுடந்தரித்த திருமுடிபூஜயாமி
சகலரும்துதித்துப்போற்றும் சதுர்ப்புஜம்பூஜயாமி
திருமகள்வாஸஞ்செய்யும் ஸ்ரீவக்ஷம்பூஜயாமி
பிரம்மனும் உதித்துவந்த திருநாபிபூஜயாமி
பங்கஜபாதபத்மம் சந்ததம்பூஜயாமி
தேவர்கள்மலர்சொரிய தேவதுந்துபிமுழங்க
சாரணர்கந்தர்வரும் சங்கீதம்பாடிநிற்க
சிறந்தபுகழுடையதென் அனந்தர்கண்வளர்ந்தார்.

## ஸ்ரீவாங்கரிஷி பகவானுடன் ஐக்கியமாகுதல்.

(1-வதுமெட்டுப்போல் சொல்லவும்.)

அண்டம்சுரேழும் அளந்தபாதம் அடியான்தனக்காக அலைந்த
புண்டரிகமலர் ஒத்தபாதம் பூமங்கைகங்கை உறையும்பாதம்
கொண்டலாழி சூழ்ந்தமலையாளம்கொல்லங்கொச்சியும்கோழி
பொங்கிவளங்கொண்ட தென்தேசத்தின் புண்யவான்களும்
போற்று

அம்புஜமலர் ஒத்தபாதம் அடியேன் தலையின்மேல் அணிந்தே
ஜென்மபந்தங் கழித்தெறிந்து ஜனனமரணச் சிடுக்கறுத்து
மாய்கைநீங்கியே மாதவரின் மலர்ப்பாதந்தனில் ஐக்கியமானு
வானவர்கள் சலசலென்று மலர்வருஷமுந் தான்சொரிந்தார்.

ஓம்—தத்—ஸத்.

# தமிழில்-பாணி சீரிஸ் புத்தகங்கள்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | யஜுஸ்ஸந்தியா - தர்ப்பணம் | ... | 0 | 2 | 6 |
| 2 | ருக்வேதம் ,, | ... | 0 | 2 | 6 |
| 3 | ஸ்யாமளா தண்டகம் | ... | 0 | 1 | 0 |
| 4 | முகுந்தமாலை நாமாவளியுடன் | ... | 0 | 2 | 0 |
| 5 | ஸாமவேத ஸந்தியா தர்ப்பணம் | ... | 0 | 2 | 6 |
| 6 | ஸ்தோத்ரமாலா—ஸ்துதிமஞ்சரி | ... | 0 | 3 | 0 |
| 7 | கல்பத்ரயம்—3 பூஜைகள் | ... | 0 | 5 | 0 |
| 8 | விஷ்ணு ஸகஸ்ரநாமம் | ... | 0 | 7 | 0 |
| 9 | சுப்ரமண்ய புஜங்க ஸ்தோத்ரம் | ... | 0 | 2 | 0 |
| 10 | லக்ஷ்மி ஸகஸ்ரநாமம் | ... | 0 | 7 | 0 |
| 11 | லலிதா ஸகஸ்ரநாமம் | ... | 0 | 7 | 0 |
| 12 | சுப்ரமண்ய பூஜாவிதி | ... | 0 | 4 | 0 |
| 13 | புருஷஸூக்தம் முதலிய | ... | 0 | 2 | 0 |
| 14 | இந்திராக்ஷி சிவகவசம் | ... | 0 | 2 | 0 |
| 15 | ஆதித்யஹிருதயஸ்தோத்ரம் அர்த்தத்துடன் | ... | 0 | 2 | 6 |
| 16 | ஸௌந்தர்யலஹரி | ... | 0 | 2 | 6 |
| 17 | பஜகோவிந்தம்—கோபிகாகீதை | ... | 0 | 1 | 0 |
| 18 | சுப்ரமண்ய ஸகஸ்ரநாமம் | ... | 0 | 7 | 0 |
| 19 | லக்ஷ்மி அஷ்டோத்தரம் பதவுரையுடன் | ... | 0 | 2 | 6 |
| 20 | சிவானந்தலஹரி | ... | 0 | 2 | 0 |
| 21 | யஜுர் உபாகர்மம் | ... | 0 | 2 | 0 |
| 22 | நவக்ரஹ ஸ்தோத்ரம் | ... | 0 | 3 | 0 |
| 23 | ஸ்ரீராமாயணம்—நாமராமாயணம் | ... | 0 | 1 | 0 |
| 24 | அகிலாண்டேச்வரி அக்ஷரமாலிகா | ... | 0 | 1 | 6 |
| 25 | யஜுஸ்ஸந்தியா பாஷ்யம் | ... | 0 | 5 | 0 |
| 26 | ஸங்கராந்திபூஜை—கோபூஜை | ... | 0 | 2 | 0 |
| 27 | மார்க்கபந்துஸ்தோத்ரம் | ... | 0 | 2 | 0 |
| 28 | நித்யாஹ்னிகம்—நித்யானுஷ்டானவிதி | ... | 0 | 6 | 0 |
| 29 | ஸதாசிவ கீர்த்தனங்கள் | ... | 0 | 1 | 0 |
| 30 | அஷ்டபதி—கீதகோவிந்தம் | ... | 0 | 5 | 0 |
| 31 | விஷ்ணுபாதாதிகேசாந்த ஸ்தோத்ரம் | ... | 0 | 2 | 0 |
| 32 | தேவீநித்யபாராயணம் | ... | 0 | 8 | 0 |
| 33 | தேவீகட்கமாலா—நாமாவளியுடன் | ... | 0 | 1 | 6 |
| 34 | பகவந்நாம அஷ்டோத்தரகதம்பம் | ... | 0 | 8 | 0 |
| 35 | மஹிஷாசுரமர்த்தனி ஸ்தோத்ரம் | ... | 0 | 1 | 0 |
| 36 | லலிதாத்ரிசதி நாமாவளியுடன் | ... | 0 | 4 | 0 |
| 37 | கிருஷ்ணலீலா தரங்கிணி (அச்சில்) | ... | 1 | 4 | 0 |

பி. டி. பாணி கம்பெனி, திருவல்லிக்கேணி, மதராஸ்.

# விளம்பரம்

## R. S. சுபலக்ஷ்மி அம்மாளால்

பிரசுரிக்கப்பட்ட புஸ்தகங்கள்

| | | | | |
|---|---|---|---|---|
| 1. வால்மீகி ராமாயணப் பாட்டும், ஞான ராமாயணக் கப்பலும் | ... | 0 | 5 | 0 |
| 2. குசலவ வாக்கியம் | ... | 0 | 5 | 0 |
| 3. அனந்தங்காடு | ... | 0 | 3 | 0 |
| 4. ஸ்ரீ பார்வதி அம்மன் சோபனம் | ... | 0 | 5 | 0 |
| 5. வேதாந்தப் பாட்டுகளும் தினஸரி ஸ்தோத்திரங்களும் | | 0 | 6 | 0 |
| 6. ஜீவநாடகம் முதலிய சில அத்வைதப் பாட்டுகளும் பஞ்சீகரண மகா வாக்கியமும் | ... | 0 | 4 | 6 |
| 7. பஞ்சீகரண கட்டம் | ... | 0 | 0 | 6 |
| 8. சாவித்திரி பாடம் | ... | 0 | 3 | 0 |
| 9. ஸ்ரீ லலிதாம்பாள் சோபனமும் தேவிபாடமும் | ... | 0 | 6 | 0 |
| 10. ஐந்து கும்மிகள் | ... | 0 | 3 | 0 |
| 11. குறவஞ்சி (தர்மாம்பாள் குறம், வேதாந்தக் குறம், அகண்டவெளிக்குறம்) | ... | 0 | 3 | 0 |
| 12. கலைக்ஞானி தாயுமானார் - மூன்று பாடல்களின் விரிவுரை | | 0 | 8 | 0 |

கிடைக்குமிடங்கள் :—

**R. S. S. அம்மாள்,**
**No. 33, Edward Elliot Road,**
**Mylapore, MADRAS.**

**பி. டி. பாணி அண்டு கோ,**
**1/15,** வெங்கடாசலம் செட்டி தெரு, திருவல்லிக்கேணி.

**R. சுப்பிரமணிய வாத்தியார் & Sons.**
*Book sellers & Publishers*, கல்பாத்தி, பாலக்காடு.